**மத்திய மாகாண சபை - 2014**

-----------------------------------------------------

மத்திய மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க

நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபையின் நிதியம்

மாகாண சபை நிதியக் கணக்குகள் 2015 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2015 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | 2014 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகள் | | |
|---|---|---|---|---|
| | கணக்குகள் தொடர்பான விபரம் | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று | 01 | 01 | - |
| (ii) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 33 | 33 | - |
| (iii) | வருமானக் கணக்குகள் | 02 | 02 | - |
| (iv) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 65 | 65 | - |
| (v) | வணிக முற்பணக் கணக்குகள் | 08 | 06 | 02 |
| (vi) | நிதியக் கணக்குகள் | 01 | 01 | - |
| (vii) | நியதிச்சட்டக் கணக்குகள் | 03 | 01 | 02 |
| (viii) | மாகாண சபை உறுப்பினர்களின் முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - |
| | மொத்தம் | 114 | 110 | 04 |

**2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

**-----------------------------------------------**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 சனவரி 24 ஆந் திகதிய எஸ்எஸ்/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் வருடாந்த கணக்குகள் அட்டுறு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது மத்திய மாகாண சபை அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) காசு அடிப்படையில் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 02 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிச் சொத்துக்கள் மற்றும் சில பொறுப்பு மீதிகள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபையின் ஆரம்பம் முதல் மத்திய அரசினாலும் மாகாண சபையினாலும் நிலையான சொத்துக்களுக்காக கருத்திற் கொள்ளப்படக்கூடிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 53,265,256 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகளின் மூலம் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண சபையின் கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குரிய கணக்குகள், நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படாதிருந்தமை 1 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக செலவிடப்பட்ட ரூபா 423,333,000 தொகையான மீண்டெழும் செலவினங்கள் மற்றும் ரூபா 270,318,522 தொகையான மூலதனச் செலவினங்கள் தலைப்பு இலக்கம் 570 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருள் இருப்புக்களில் ஆண்டின் இறுதியில் எஞ்சிய இருப்புக்களின் பெறுமதியை கணிப்பிட்டு அப்பெறுமதி நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது மொத்தச் செலவினமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் வழங்கல் மற்றும் சேவைகள் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்கள ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 16,336,059 கூட்டுத்தொகையான பொறுப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் உற்பத்திச் செலவினங்களின் அடிப்படையில் ரூபா 174,534,606 தொகையான நிலுவை வரி வருமானம் மற்றும் விற்பனைக் கட்டணங்களின் அடிப்படையில் ரூபா 1,607,951 தொகையான நிலுவை வருமானம் என்பன கணப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மத்திய மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களின் முற்பணக் கணக்கிற்காக பிரதம செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 35,171,446 தொகை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் வணிக முற்பணக் கணக்கிற்கான மூலதனப் பங்களிப்புக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச் செலவினம் (ஈ) இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 2,371,143 தொகையான செலவினம் மீண்டெழும் நிதிஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக உரிய செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் மொத்த மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினங்கள் முறையே சமமான பெறுமதியால் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) அவசர சந்தர்ப்ப நிதியத்தின் 2 நிலையான வைப்பு முதலீட்டிலிருந்து 2014 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய அட்டுறு வட்டி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 61,578 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது வாடகைக் கொள்வனவு வசதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 09 வேன் வாகனங்கள், 12 மோட்டார் கார்கள் மற்றும் 82 டபள் கெப் வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 83,213,394 தொகையான தவணைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 206,051,953 தொகையான தவணைப் பணமும் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 1,960,372,251 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்தும் உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடுசெய்த போது அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 297,717,763 ஆக இருந்தன.

**2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

---

(i) பல வருட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற 5 நிறுவனங்களினால் தீர்க்கப்படாத ரூபா 80,527,173 கூட்டுத்தொகையான அங்கீகரிக்கப்பட்ட முற்பண மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியில் 3 முதல் 11 வருடங்கள் வரையிலான காலத்தில் உள்ள ரூபா 949,748 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(ii) வணிக முற்பணத்திற்காக மூலதனப் பங்களிப்புக் கணக்கின் கீழ் பிரயாணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,677,540 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண அரசாங்க உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,183,475,521 ஆக இருந்ததுடன் 5,941 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 131,657,500 தொகையான கடன் மீதி அதில் உள்ளடங்கியிருந்தது. நீண்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்ட இந்தக் கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாகாண சபை மற்றும் ஏனைய 13 நிறுவனங்களுக்கு இடமற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்காக அந்த நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,773,730 தொகையான கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

ஏனைய மாகாண சபை மற்றும் 16 பல்வேறு நிறுவனங்களிலிருந்து இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தர்களுக்காக அந்த மாகாணங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,783,323 தொகையான கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்பணக் கணக்கின் எல்லை

----------------------------------------------------

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட செலவினங்களின் ஆகக் கூடிய எல்லை ரூபா 1,277,278 இனால் விஞ்சியிருந்ததுடன் விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை முறையே ரூபா 174,520 இனாலும் ரூபா 5,437 இனாலும் அடையப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 86,540,638 கூட்டுத்தொகையான 18 சொத்து மீதிகளும், ரூபா 4,783,324 கூட்டுத்தொகையான 16 பொறுப்பு மீதிகளும் தொடர்பாக பதிவேட்டுச் சான்றுகள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் மற்றும் செயலமர்வுகளுக்காகப் பங்குபற்றிய நபர்களுக்கு உணவு பானங்களை வழங்குவதற்காக 25 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,161,352 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த கலந்துரையாடல்களின் குறிப்புக்கள் பங்குபற்றிய வளவாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

----------------------------------------------------------------------------------------------

கீழே காண்பிக்கப்டுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | | |
| | (i) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச்சட்டம் | 1,074,005 | அறவிடப்பட்ட முத்திரை வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 2010 சனவரி 10 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட முத்திரை வரி, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் முறையான அங்கீகாரம் பெறப்படாமல் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(அ), 08 ஆம் இலக்கங்கள் மற்றும் 12 ஆம் பிரிவு | 10,875,163 | பொது ஒப்பந்தப் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா ஐந்து மில்லியனை விஞ்சிய மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. |
| | | | | |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | | 13,551,126 | வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட 6 நிறுவனங்களுக்குரிய வைப்பு மீதிகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| (இ) | மாகாண நிதி விதி | | | |
| | ------------------------------ | | | |
| | (i) | 259.2 ஆம் விதி | 2,260,594 | தொடர்புடைய விதியின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படாமையினால் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 5,225,776 தொகையான கட்டுநிதிக் கணக்கு மீதியில் 2003 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 05 வருட காலப்பகுதிக்குரிய கட்டுநிதி மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| | (ii) | 283.4 ஆம் விதி | 492,523 | 07 நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தை விஞ்சிய 44 காசேலைகள் தொடர்பாக நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| (ஈ) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பிஎப் - 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | | - | நுவரெலியா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 11 வாகனங்களுக்காக வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பூட்கை என்பன பெறப்பட்டிருக்கவில்லை. |
| | | | | |
| (உ) | கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | | | |
| | -------------------------------------- | | | |
| | (i) | 2007 திசெம்பர் 13 | | மிகவும் வசதியுள்ள பாடசாலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆந் திகதி 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை | | யொன்றில் சேவையாற்றக்கூடிய ஆகக்கூடிய சேவைக் காலம் 06 வருடங்களாகவும், வசதியுள்ள பாடசாலையொன்றில் ஆகக்கூடிய சேவைக் காலம் 08 வருடங்களாகவும் இருந்த போதிலும் அந்த சுற்றறிக்கைக்கு முரணாக தெல்தெனிய மற்றும் தெனுவர வலயத்தில் 10 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையிலான வீச்சில் சேவைக்காலமுள்ள இடமாற்றம் பெறாதிருந்த 427 ஆசிரியர்கள் இருக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |
| | | | | |
| | (ii) | 2006 சனவரி 12 ஆந் திகதிய 2006/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | | 02 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரையான தரங்களுக்குச் சமாந்தரமான வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆக வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் சீதாதேவி பெண்கள் வித்தியாலயத்தில் 2 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரையிலான வகுப்புக்களில் அந்த எல்லையினை விஞ்சி 31 முதல் 42 மாணவர்கள் வரை 148 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். |
| | | | | |
| (ஊ) | 2011 யூலை 26 ஆந் திகதிய FC/PSDGCCBG/ Circular/2011/1 ஆம் இலக்க நிதி | | 271,650 | சுயதொழில்களை உருவாக்கல், பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நீர்ப்பாசன, விவசாய, |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | | சமய, கலாசார மற்றும் விளையாட்டு அபிவிருத்திக்காக மாத்திரம் பிரமாண அடிப்படையிலான மானியங்களிலிருந்து செலவினங்களைச் செய்ய முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் ஆயுர் வேதத் திணைக்களத்தினால் 3 சந்தர்ப்பங்களின் போது ஏனைய செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. |
| (எ) | ஏனைய<br>--------------- | | |
| (i) | 2009 செப்தெம்பர் மாதம் திகதியற்ற மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் மப/கல்வி/மு/4 ஆம் இலக்க கடிதத்தின் 21 ஆம் பந்தி | - | காணி தொடர்பான உரித்து சம்பந்தமாக வழங்கப்பட்ட ஆலோசகையின் படி யட்டிநுவர பிரிவிற்குரிய 34 பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ள காணிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலங்கைக் குடியரசின் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் xii ஆம் அத்தியாயத்தின் 146(i) | 2,814,412 | கொத்மலை, நுவரெலியா, வலப்பனை மற்றும் ஹட்டன் போன்ற 4 வலயக் கல்வி அலுவலகங்களில் 08 ஆசிரியர்கள் இராணுவச் சேவைக்கும் மாணவர் சேவைக்கும் நீண்டகாலமாக விடுலிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட சம்பவத்தை அந்த நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கு 2015 யூன் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. வருமான முகாமைத்துவம்

### 3.1 வருமானத் தலைப்பு இலக்கம் 4 - 10 மற்றும் 4 - 20 பிரதம செயலாளர்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வரி மற்றும் வரியல்லாத வருமானத்தில் ரூபா 5 மில்லியன் குறைவையும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானத்தின் பற்றாக்குறையில் 5.85 சதவீத அதிகரிப்பையும், ஒட்டுமொத்த பாதீட்டுப் பற்றாக்குறையில் 11.67 சதவீத அதிகரிப்பையும் காண்பித்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வரி மற்றும் வரியல்லாத வருமானங்களில் ரூபா 744,888,129 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானத்தின் பற்றாக்குறையில் ரூபா 906,451,710 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதியில் மாகாண சபை நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 1,514,217,234 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அப்பெறுமதி ரூபா 2,439,088,072 எனக் காண்பிக்கப்பட்டு ரூபா 924,870,838 அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இறுதிக் கணக்கின் படி மோட்டார் வாகன அனுமதிப்பத்திர நிலுவை வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 79,420,230 ஆக இருந்த போதிலும் 29 பிரதேச செயலகங்களிலிருந்து வெளியே மாற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களும் அந்த மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2** 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது விலங்கு உணவு விற்பனைகளிலிருந்து கிடைத்த ரூபா 80,453 தொகையான வருமானம் உரிய மாகாண சபை வருமானக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் மிருக உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

---------------------

### 4.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 20,941,587,379 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,751,665,970 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,189,921,409 தொகையான வீழ்ச்சியினைக் காண்பித்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

----------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மொத்த வருமானத்திற்கு பற்றாக்குறை

------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது பற்றாக்குறை 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், ஒட்டுமொத்த பற்றாக்குறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,189,921,409 தொகையான கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவினத்திற்குமிடையிலான விகிதம்

---

முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவினங்களுக்கிடையிலான விகிதாசாரம் அதிகரிக்கும் போக்கினைக் காண்பித்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த விகிதம் 17 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது. மொத்த வருமானத்திற்கு எதிராக மொத்தச் செலவினம் 05 மடங்கினால் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையினால் அது திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானமும் செலவினமும்

---

மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினமும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மதிப்பீடு செய்யப்பட்ட வரி வருமானத்தின் இலக்கு ரூபா 65.3 மில்லியனால் அதாவது 1.41 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், வருமானத்தின் 05 விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே ரூபா 67,537 முதல் ரூபா 359,652,610 வரை அதாவது 5 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் வருமானத்தில் குறைவு காணப்பட்டது.

(ii) வரியல்லாத வருமானம் மற்றும் கட்டணங்களின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு ரூபா 4.9 மில்லியனால் அடைய முடியாதிருந்ததுடன், 03 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே ரூபா 499,500 முதல் ரூபா 53,560,020 வரை அதாவது 38 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

(iii) 04 செலவினத் தலைப்புக்களில் மதிப்பிடப்பட்ட செலவினமும் உள்ளபடியான செலவினமும் ரூபா 1,593,610 முதல் ரூபா 695,938,259 வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

(iv) அரசாங்கத்தின் மூலதன மானியத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,435,389,508 தொகை அதாவது 23 சதவீதம் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப்பிரமாணம் 50(ii) மற்றும் நிதி விதி 7.2.1 இல் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய கவனத்துடன் மதிப்பிடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையினால் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே மேலே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் முரண்கள் ஏற்பட்டிருந்தன.

## 5. அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு

### 5.1 மத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை

(அ) கணக்காய்வு அபிப்பிராயம்

மத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

i. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

❖ அதிகாரசபையினால் ரூபா 1,133,402 கூட்டுத்தொகையான செலவினம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

- 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக ஏற்படுகின்ற பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட பணிக்கொடை ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 38,686,696 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

தாபன விதிக் கோவையின் XXXIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாது சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 697,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

iii. அதிகாரசபைக்கு எதிரான சட்ட விடயங்கள்

---

பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் 09 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 1,500,000 தொகை இழப்பீடு கோரப்பட்டிருந்தது.

iv. இனங்காணப்பட்ட நட்டம்

---

அதிகாரசபைக்கு எதிராக சேவையிலிருந்து அகற்றப்பட்ட உத்தியோகத்தரொருவர் தொழில் நியாய சபையால் தொடரப்பட்ட வழக்கொன்றிற்காக ரூபா 208,800 தொகையான நட்டஈட்டைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 5.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

(அ) கணக்காய்வு அபிப்பிராயம்

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் மறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

i. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- எஸ்போல்ட் செயற்திட்ட வருமானம் ரூபா 558,376 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

- வங்கி நடைமுறைக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,682,792 தொகையான நேரடி செலவு வைத்தல்கள் மற்றும் ரூபா 87,428 தொகையான வரவு வைத்தல்கள் இனங்காணப்பட்டு சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- காணி மற்றும் 06 கட்டிடங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மத்திய மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக ஏற்படுகின்ற பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட பணிக்கொடை ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 6,210,441 ஆக இருந்த போதிலும்

அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- ❖ மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (இ) மற்றும் 2.5.1 என்ற பிரிவுகளுக்கு இணங்காமல் முறையே ரூபா 1,067,340 மற்றும் ரூபா 1,263,984 பெறுமதிகளான கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- ❖ மாகாண நிதி விதி இலக்கம் 84.7 இற்கு இணங்காத வகையில் ரூபா 1,299,526 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- ❖ 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத 27 ஒப்பந்தக்காரர்களுடன் தலைவரினால் ரூபா 214,745,384 பெறுமதியான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

iii. அதிகாரசபைக்கு எதிராகவுள்ள சட்ட விடயங்கள்

--------------------------------------------------------------------------------

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக வெளித்தரப்பினர்களினால் 07 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 2,625,649 தொகை நட்டஈடு கோரப்பட்டிருந்தது.

**5.3 வணிக முற்பணக் கணக்குகள்**

**5.3.1 ஹட்டன் வள நிலைய முற்பணக் கணக்கு**

(அ) கணக்காய்வு அபிப்பிராயம்

அபிப்பிராயம் மறுக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

(i) மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,760,000 ஆக இருந்த போதிலும் அடையப்பட்ட எல்லை ரூபா 1,480,130 ஆனமையால் மதிப்பீட்டு எல்லையினை விட ரூபா 279,870 தொகை அதாவது 16 சதவீதக் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) மத்திய மாகாணத்தில் கல்வி பயிலுகின்ற பிள்ளைகளின் அறிவு, எண்ணங்கள், திறன்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அந்தப் பாடசாலைகளின் மாணவர்களினதும் கல்வி முகாமையாளர்களினதும் செயலாற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் நிலையத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக எந்த நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 590202 ஆம் விடய இலக்க விவசாய விதைப்பொருள் முற்பணக் கணக்கு

(i) முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய அமைச்சரவைத் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்குரிய செயற்திட்ட அறிக்கை 2014 செப்தெம்பர் மாதத்தின் பின்னர் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்ட அறிக்கையில் விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனைகளின் செயல்முன்னேற்றம் மாவட்டங்களின் பிரகாரமும் விதை மற்றும் நாற்றுப் பொருட்களின் வகைகளின் பிரகாரமும் தனித்தனியாக காண்பிக்கப்படக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 591202 ஆம் விடய இலக்க கல்பாலம் பண்ணை முற்பணக் கணக்கு

---

(i) கணக்குகளுடன் சமா்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகங்களின் படியும் திறைசேரிப் புத்தகங்களின் படியும் காணப்படுகின்ற கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 150,052 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) 2014 இன் இறுதி அரையாண்டின் போது 2 பிரதேசங்களில் லீக்ஸ் பயிரிடப்பட்டிருந்ததுடன் ஒரு பிரதேசத்தில் பயிர்ச் செய்கை வெற்றியளிக்காமையினால் ஏற்பட்ட ரூபா 25,032 தொகையான நட்டம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் பயிர்களினால் ஏற்பட்ட ரூபா 24,402 தெகையான நட்டத்துடன் ரூபா 49,434 தொகையான மொத்த நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 592202 ஆம் விடய இலக்க மருந்து கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் முற்பணக் கணக்கு

---

(i) முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் செலவினங்களைச் செய்வதற்காக ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் ரூபா 7,500,000 நிதியேற்பாட்டு எல்லை வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாட்டில் 48 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து ஆகக் குறைந்தது ரூபா 15,000,000 உழைக்கப்பட வேண்டுமென ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,706,640 அல்லது 31 சதவீதம் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 6.1 செயலாற்றல்

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(i) 2003 ஆம் ஆண்டின் போது ரூபா 184,000 தொகையும், 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 299,950 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்ட இரண்டு முன்மொழியப்பட்ட மின் நீடிப்புக்களை அமுல்படுத்தாமையின் காரணமாக உரிய செலவினம் பயனற்றுக் காணப்பட்டது.

(ii) 2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 62 மின்சார செயற்திட்டங்களை அமுல்படுத்தவதற்காக மின்சார சபைக்கு ரூபா 15,410,448 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 14,597,729 தொகை கொடுப்பனவு செய்யப்பட்ட 55 செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 05 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(iii) யப்பான் சர்வதேச நட்புறவு நிறுவனத்தினால் 15 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 1,725 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அதில் 07 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி

செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய 08 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 75 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iv) ‘‘ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 16 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 111.44 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் 06 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய 10 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 25 சதவீதம் முதல் 90 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) வீடமைப்புத் திணைக்களத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட 03 வீட்டு வாடகைச் சபைக்குக் கிடைத்த 166 முறைப்பாடுகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முறைபாடுகளின் எண்ணிக்கை 124 ஆகும்.

(இ) போக்குவரத்துத் திணைக்களத்தில் காற்றுச் சீராக்கி செயலமர்வை அமுல்படுத்துதல், தகைமைச் சான்றிதழ் மற்றும் புத்தகத்தின் விலையினை அதிகரித்தல், 36 பிரதேச செயலகங்களுக்கு யூவீ விளக்கு (UV Lamp) வழங்குதல், பயன்பாட்டிலுள்ள உயர்ந்த கராஜை மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் மற்றும் போக்குவரத்து விதிகளை அங்கீகரித்துக் கொள்ளல் போன்ற பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டின் மருந்து உற்பத்தித் திட்டத்தின் படி 36 வகை மருந்துகளின் உள்ளபடியான உற்பத்தி 30 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் மதிப்பிடப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(உ) மத்திய மகாணத்தில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்ற எனினும் மத்திய மாகாணத்திற்கு வெளியே வசிக்கும் 03 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 14,406,365 தொகையான புரள்வு வரி அறவிடுதல் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை

எடுக்கும் செயற்பாடுகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதம அமைச்சின் செயலாற்றல் அறிக்கையில் செயல்முன்னேற்றம் 100 சதவீதமாகக் காண்பிக்கப்பட்ட 10 ‘‘ஈநென பியச’’ தகவல் தொழில்நுட்ப நிலையங்களுக்காக 30 கணனிகள், 10 நிழற்பட பிரதி இயந்திரம் உள்ளடங்கலாக 10 அலுவலக உபகரண விடயங்களுக்குரிய 216 அலகுகள் மற்றும் 2000 உள்ளக கூட்டுப்பசளைப் பாத்திரங்களைக் கொள்வனவு செய்தவற்காக ரூபா 7,262,485 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய நோக்கங்களில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) 2013 மார்ச் 13 ஆந் திகதிய 2013/11 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின்படி பாடசாலைகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களின் போது பணம் சேகரிக்கப்பட வேண்டாமென காண்பிக்கப்பட்டிருக்கும் போதும், அதற்கு இணங்காத வகையில் ஒரு பாடசாலையில் 2013 முதல் 2014 நவம்பர் 07 ஆந் திகதி வரையிலான முதலாம் வகுப்பு உட்பட ஏனைய வகுப்புகளுக்காக 481 மாணவர்களை சேர்க்கும் போது முறையே ரூபா 6,067,400 தொகை மற்றும் ரூபா 7,870,990 தொகையாக ரூபா 13,938,390 கூட்டுத்தொகையான பணம் சேகரிக்கப்பட்டு பாடசாலை அபிவிருத்திக் கணக்கிற்கும் பாடசாலையைக் கட்டியெழுப்பும் கணக்கிற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தை கவனத்தில் கொள்ளும்போது ரூபா 65 மில்லியனால் வருமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 6.2 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

---

(அ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அந்தத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 12,108,412,466 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 07 செலவின விடயங்களின் கீழ் ரூபா

116,583,127 தொகை ஆரம்ப மற்றும் இரண்டாம் கல்வி நிலைகளில் ஈடுபடுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்வடையச் செய்வதற்காக தேவையான விடயம் சார்ந்த பெறுபேறுகளின் மீளாய்வு செய்யப்படாதிருந்ததுடன் பெறுபேறுகளை உயர்வடையச் செய்வதற்குத் தேவையான வழிமுறைகளை கண்டறிந்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014 ஆம் ஆண்டில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பரீட்சை | தோற்றியவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை | சுகல பாடங்களிலும் சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | 43,595 | 4,891 | 38,704 | - |
| க.பொ.தராதர. (சா.த)* | 34,085 | 22,481 | 11,604 | 1,255 |
| க.பொ.தராதர. (உ.த)* | 25,975 | 15,547 | 10,428 | 1,862 |

* மாகாணத்தின் ஒட்டுமொத்த பெறுபேறுகளின் படி மத்திய மாகாணத்திற்கு க.பொ.த(சா.த) இற்காக 6 ஆவது இடமும், க.பொ.த(உ.த) இற்காக 7 ஆவது இடமும் கிடைத்திருந்தது.

(ஆ) வலய மட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா.த) பரீட்சைகளின் போது நாட்டிலுள்ள மாவட்டங்களின் பிரகாரம் ஒட்டுமொத்த நிலையும் பின்வருமாறு இருந்தன.

| பரீட்சை | ஒட்டுமொத்த பெறுபேறுகளின் படி பெறப்பட்ட இடம் | | |
|---|---|---|---|
| | கண்டி | மாத்தளை | நுவரெலியா |
| புலமைப் பரிசில் | 11 | 12 | 20 |
| சா.த | 10 | 19 | 23 |

## 6.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடதும்பர சித்தார்த்த ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2010 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 20,000,000 தொகை உடதும்பர பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தெல்தெனிய வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2012 யூன் 26 ஆந் திகதி இந்தக் காணியின் உரித்து கையேற்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 6865 செயற்திட்டங்களில் 1392 செயற்திட்டங்கள் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன.

(இ) 1994 யூலை 01 ஆந் திகதிய 24/94 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் 2001 சனவரி 15 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணம் தொடர்பாக மாகாண சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2013 ஆம் ஆண்டிற்காக அனுப்பப்பட வேண்டிய ரூபா 87,518,868 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் 86 உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கசேவை சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்த ரூபா 10,157,005 தொகை 2003 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அதில் ரூபா 8,113,312 தொகை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 76 சுகாதார சேவை நிறுவனங்களின் காணிகளின் உரித்து முறையாக அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்டிராததுடன் மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வீடமைப்புத் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 11,250,000 தொகையான கடன் குறைப்பயன்பாட்டுடன் காணப்படுவதுடன், இப்பணத்தை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தால் உழைக்க கூடியதாக இருந்த ரூபா 3,150,000 தொகையான வட்டி வருமானத்தை திணைக்களம் இழந்திருந்தது.

(எ) 18 வருட காலத்தில் வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வீட்டுக் கடன்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் மேலும் அறவிடவேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 2,696,231 ஆகும். மேலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் ஊடாக 664 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,873,572 தொகையான கடன் மீதி மற்றும் ரூபா 1,148,090 தொகையான வட்டிப் பணம் என்பவற்றை அறவிடுதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தாமதத்துடன் காணப்பட்டது.

(ஏ) மாகாண சபை உறுப்பினர்களுக்காக கடன் உத்தேசத் திட்டத்தை தாபித்தல் தொடர்பாக 2001 மார்ச் 28 ஆந் திகதிய நிதி/01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உறுப்பினர் பதவி இல்லாது போன 15 மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,496,446 தொகையான கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கு 01 வருடம் முதல் 08 வருடங்கள் வரையான கால இடைவெளியில் தாமதம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) மத்திய மாகாண சபைக்குரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கணக்காய்வு அறிக்கை கலந்துரையாடும் நடவடிக்கைகள் மாகாண கணக்குக் குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம்

ஆண்டின் இறுதி வரையிலும் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு அறிக்கைகளுக்குரிய சகல நிறுவனங்களையும் மேவுகை செய்யும் வகையில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கான திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிதி விதிக்கோவையின் 85, 86 மற்றும் 87 என்ற விதிகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சேவை, வேலை அல்லது வழங்கல் பூர்த்தி செய்யப்படும் போது அங்கீகரித்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் பணக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், விவசாய அமைச்சினால் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காமல் பொருள் வழங்கலின்றி 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,195,350 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் Lenth Measuring Boards இற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் அந்த மாதிரிகளுக்கு இணங்க 2 வருட உத்தரவாத காலத்தின் கீழ் ஒன்று ரூபா 4,745 ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்படாமல் வருடமொன்றின் உத்தரவாத காலத்தின் கீழ் ரூபா 25,837 தொகையான கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து அதில் 78 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 1,645,176 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) யட்டிநுவர தெல்தெனிய வாய்க்கால் மற்றும் அமுனுபுர பொலன்தெனிய, கஹவத்துகொட, தெல்கஹகும்புர போன்ற வயல்வெளிகளைப் பாதுகாப்பதற்காக திட்டமிடப்பட்ட உப செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 703,946 தொகை செலவில் பக்கச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தச் சுவர் வயல் வெளியின் பாதுகாப்பிற்கு பொருந்தாதிருந்தமை 2015 ப்பெரவரி மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட வீதி அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாணங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின் படி எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளப்படாமை, கலவை அளவுகள் காண்பிக்கப்படாமை, வீதிகள் குறிப்பிட்ட தடிப்பில் காணப்படாமை, பரிசோதனை அறிக்கை வெற்றியளிக்காமை மற்றும் பிழையாக குறுகிய அளவிடைகள் சமர்ப்பித்தல் போன்ற விடயங்களின் காரணமாக டெஸ்ட்போட் மெராயா வீதி நிர்மாணிப்பதற்குரிய கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 2014 சனவரி 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் வீதியின் மேற்பரப்பில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதி முழுமையாக வெடித்து கழன்றிருந்த போதும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது பூரணமற்ற குழுவொன்றின் பரிந்துரை அடிப்படையில் ரூபா 5,019,951 தொகையொன்று ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) குண்டசாலை மஹவத்தை வீதியில் கிலோமீற்றர் 0.00-370 வரையான பகுதி முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வேறொரு நிறுவனமொன்றினால் அதன் மீது காபட் போடப்பட்டமையினால் அதிகாரசபையினால் செலவிடப்பட்ட ரூபா 1,879,053 கூட்டுத்தொகையான செலவினம் பயனற்றதாக இருந்தது.

(iii) பிரிந்திவெல மாதளாப்பிட்டிய வீதியின் வேலையை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து ரூபா 116,025 தொகை அறவிடப்படாது இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த பொறியியல் நியமங்களுக்கு இணங்க வீதி நிர்மாணிக்கப்படாமையினால் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு 03 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னர் ஒட்டுமொத்த வீதியினதும் 40 சதவீதமான பகுதியின் அபிவிருத்தி

செய்யப்பட்ட இடம், மிகவும் மோசமாக உடைந்து குழிகள் விழுந்து கழன்றிருந்தது. அதன்படி நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 3,020,234 தொகையான மொத்தத் தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஆய்வுகூடப் பரிசோதனைகளிலிருந்து வெற்றியளிக்காத ரூபா 2,417,409 பெறுமதியான ஏபீசீ மற்றும் 37.5 மில்லிமீற்றர் கல் இருப்பொன்று நுககஹமுல இலுக்வத்த வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைக்காக விநியோகிக்கப்பட்டிருந்தது.

(எ) பரணாகல பெனிலண்ட் வீதியை அபிவிருத்தி செய்யும் போது நிறைவேற்று பொறியியலாளரின் அங்கீகாரமோ அல்லது அனுமதியோ இன்றி இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஆய்வுகூட பரிசோதனைகளில் வெற்றியடையாத ரூபா 1,360,175 தொகையான ஏபீசீ மற்றும் 37.5 மில்லிமீற்றர் கற்கள் வேலைத் தளத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபைக்குரிய 42-5175 ஆம் இலக்க லொறி வண்டியிலிருந்து அதிகாரசபைக்குரிய 37.5 மில்லிமீற்றர் 19 கியூப் கற்கள் மற்றும் 06 தார் பீப்பாய்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மோசடியாக இந்த வீதியின் உடைந்த பகுதியொன்றை அமைப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**6.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஏப்ரல் 23 ஆந் திகதிய சீபீசீ/சீஎம்/சீபீ/2014/32 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட 03 வீடுகளுக்காக தளபாடப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,200,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 10 சந்தர்ப்பங்களில் ரூபா 2,196,346.76 தொகை

செலவில் தளபாடப் பொருட்கள் வழங்கப்பட்டிருக்கும் போது அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதம அமைச்சின் கீழ் ''மஹாவலியிலிருந்து கையேற்கப்பட்ட சொத்துக்களின் பராமரிப்பு'' என்ற செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000,000 தொகையான நிதியேற்பாட்டிலிருந்து பல்லேகலை ஜனசவிகமவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைபாதையினை நிர்மாணிப்பதற்கும் ரூபா 4,433,427 தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய செயற்திட்டத்தின் மொத்த வேலை மதிப்பீடு ரூபா 4,077,911 ஆக இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த செயற்திட்டத்திலிருந்து 60 சதவீத வேலையைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 4,433,427 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி மொத்த வேலை மதிப்பீட்டுப் பெறுமதியை விஞ்சி ரூபா 355,516 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) பிரதம அமைச்சினால் 6 சந்தர்ப்பங்களின் போது பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 2,376,635 தொகையும், செலவின விடயமொன்றின் கீழ் நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 328,000 தொகையும் அமைச்சின் நோக்கங்களுக்கு புறம்பாக வேறு நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2014 நவம்பர் 30 ஆந் திகதியிலுள்ளவாறு கூட்டுறவுச் சங்கங்களை கட்டியெழுப்புவதற்காக 6 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 625,000 கடன் தொகையிலிருந்து எவ்வித தவணைப் பணமும் அறவிடப்படாதிருந்ததுடன் 07 கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,356,995 ஆகும். மேலும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் உருவாக்கப்பட்ட வ/ப. முதலீட்டு அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்காக கலைப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 1,500,000 தொகையான கடன் பணத்திற்குரிய எந்தத் தவணைப் பணத்தையும் அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 வெளிப்படையான மோசடிகள்

-----------------------------------------------

கொத்மலை கல்வி வலயத்தில் பாடசாலையொன்றின் அதிபராக சேவையாற்றியவரினால் தாபனவிதிக் கோவையின் 2 ஆம் பகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24.1 ஆம் பந்தி மற்றும் முதலாவது பட்டோலையின் 12 ஆம் உப பிரிவின் கீழ் போலியான பதிவேடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்து ஓய்வுபெற்றுச் செல்லும் திகதி 6 வருடங்களால் அதிகரிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 2,157,895 தொகை பெற்றுக்கொண்டதன் மூலம் அரசாங்கத்தின் நிதி தவறாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 6.7 செயற்பாடற்ற, குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆகஸ்ட் 29 ஆந் திகதி நடைபெற்ற மத்திய மாகாண அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2009 மார்ச் 04 ஆந் திகதி முதல் 2013 யூலை 05 வரை மத்திய மாகாண சபையின் ஐந்தாவது சபைக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 3,278,960 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 34 மடி கணனி இயந்திரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைமையொன்று காணப்படாமையினால் 2015 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையில் பிரதம அமைச்சின் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாட்டு நிதியத்தால் ரூபா 26.32 மில்லியன் தொகை 03 வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டதன் பின்னர் 2014 நவம்பர் 28 ஆந் திகதி வரையில் அந்தக் கணக்கில் மேலும் ரூபா 5,844,208 தொகையான மீதியொன்றும் பண முதலீட்டிலிருந்து கிடைத்த ரூபா 697,594 தொகையான வட்டிப் பணமும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 6.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 464,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட் பீம் கற்கள் இருப்பொன்று உரிய பலத்தைக் கொண்டிராமையின் காரணமாக பாவனைக்கு எடுக்கமுடியாததாக 2015 யூன் வரையிலும் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சுகாதார திணைக்களத்தினால் 2014 யூலை 30 ஆந் திகதி ரூபா 725,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட Cervical traction Unit (CTU) வைத்திய உபகரணம் மற்றும் 2011 யூன் 13 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டு திகன வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 810,000 பெறுமதியான Short wave diathermy மருந்து இயந்திரத்தின் சில பகுதிகள் குறைவானமையால் 2015 யூலை 21 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது வைத்தியசாலையின் கதிர்வீச்சுப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2006 சனவரி 04 ஆந் திகதிய CSA/PI/40 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின்படி பிரதம அமைச்சருக்கும் அவரின் பிரத்தியோக பதவியணியினருக்கும் நியமிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 07 ஆக இருந்தது. எனினும் மத்திய மாகாண பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு 12 வாகனங்களும் குழுப் போக்குவரத்துப் பிரிவில் 02 வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன.

(ஈ) மத்திய மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது மத்திய மாகாண பிரதம அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 593 உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட வேலைவாய்ப்புக்களுக்காகவும் கல்வி நடவடிக்கைகளுக்காகவும், கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் அமைச்சின் கொடுப்பனவின் கீழ் 09 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றிருந்தனர்.

## 6.9 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதாரத் திணைக்களத்தினால் 2 சந்தர்ப்பங்களின் போது சமமான மாதிரிகளையுடைய "Defibrilotor" என்ற வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், முதலாவது சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுக்காக ரூபா 710,000 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) ஆயுர்வேதத் திணைக்களத்தின் உற்பத்திக்கூடத்தில் குறைந்த கிரயத்தில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்த 3 மருந்து வகைகள் ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்திடமிருந்து உயர்ந்த கூறு விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 92,850 மேலதிக கிரயமொன்றைச் செய்வதற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) உரிய பெறுமதியில் மதிப்பிடப்படாமல் பூரணக் காப்புறுதிப் பூட்கை பெற்றுக்கொள்ளப்பட்டமையினால் விபத்துக்களுக்குள்ளாகிய 02 வாகனங்கள் தொடர்பாக காப்புறுதி உரித்துக்களில் உள்ளடக்கப்படாத ரூபா 102,311 தொகையான நட்டம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு விவசாய அமைச்சின் செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக 108 சந்தர்ப்பங்களுக்குரிய தீர்க்கப்படாது காணப்பட்ட ரூபா 14,537,137 தொகையான இழப்புக்கள் மற்றும் 166 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 19,247,237 தொகையான சொத்துக்களின் இழப்புக்களை உள்ளடக்கியதாக ஏற்பட்ட மொத்த இழப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 33,784,374 ஆக இருந்தது. பல வருடகாலமாக தீர்க்கப்படாது காணப்படுகின்ற இந்த வாகனங்கள் மற்றும் சொத்து இழப்புக்களை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.10 பதவியணியினர் நிருவாகம்**

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மத்திய மாகாண சபையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. (ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை தவிர)

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,983 | 1,429 | 554 | - |
| மூன்றாம் நிலை | 657 | 489 | 168 | - |
| இரண்டாம் நிலை | 8,956 | 6,411 | 2,545 | - |
| ஆரம்ப நிலை | 4,372 | 3,813 | 559 | - |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | 14 | 74 | - | 60 |
| மொத்தம் | 15,982 | 12,216 | 3,826 | 60 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர் விபரம்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிபர் மற்றும் ஆசிரியர் சேவையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,687 | 1,572 | 115 | - |
| ஆசிரியர்கள் | 24,818 | 27,115 | - | 2,297 |
| இரண்டாம் நிலை | 2,044 | 1,340 | 704 | - |
| ஆரம்ப நிலை | 245 | 7 | 238 | - |
| மொத்தம் | 28,794 | 30,034 | 1,057 | 2,297 |

(இ) மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 43 உள்ளூராட்சி நிறுவனங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் கூட்டுத்தொகை 6,060 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 5,765 ஆனமையால் வெற்றிடங்கள் 295 ஆக இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 43 உள்ளூராட்சி நிறுவனங்களில் சில பதவிகளில் 989 பேர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அதில் 35 உள்ளூராட்சி நிறுவனங்களில் ஏனைய பதவிகளில் 517 பேர்களின் மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 6.11 மதிப்பீட்டு நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்

---------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிர்வாகத்திற்காக தலைப்பு 16 இன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து 14.72 சதவீதத்திற்கும் 64.81 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) நிலையான சொத்துக்களை கையேற்பதற்காக 04 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து 17.05 சதவீதத்திற்கும் 73.24 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன.

(இ) பிரமாண அடிப்படையிலான மானியத்தின் கீழ் 10 தலைப்புக்களில் 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டிலிருந்து 23.79 சதவீதத்திற்கும் 82.60 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன.

(ஈ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் 5 தலைப்புக்களில் 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டிலிருந்து 15.80 சதவீதத்திற்கும் 96.05 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) விஷேட செயற்திட்டத்தின் கீழ் 04 செலவினத் தலைப்புக்களில் 08 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நீதியேற்பாட்டில் 20

சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. பிரதம செயலாளரின் செலவினத் தலைப்பின் கீழ் ''மழையினால் சேதத்திற்குள்ளான வீதி அபிவிருத்தி செயற்திட்டம்'' இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 180,000,000 மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

**7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/12/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 இன் படி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 08 அமைச்சு/ திணைக்களங்கள் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ரூபா 7,000,000 தொகையான பாதீடு செய்யப்பட்ட 03 வருமான விடயங்களிலிருந்து எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன், மேலும் பாதீடு செய்யப்பட்ட 07 வருமான விடயங்களில் உழைக்கப்பட முடியாதிருந்த இலக்கு 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. மதிப்பிடப்பட்ட செலவின எல்லையை விஞ்சி முறையான அங்கீகாரமின்றி ரூபா 2,512,479 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபையின் 27 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்களிலிருந்து ரூபா 21,597,440 தொகையான வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபையின் வாகனங்களைப் பராமரிக்கும் செலவினத்திற்காக ரூபா 500,000 தொகையான நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 1,134,380 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

## 7.3 தீர்வுகாணப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட 38 கணக்காய்வுப் பந்திகள் 2014 யூலை 24 ஆந் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி அரசாங்கக் கணக்குக் குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு வழங்கப்பட்ட கட்டளையின் படி நடவடிக்கை எடுக்காமையினால் அதில் மேலும் 12 கணக்காய்வுப் பந்திகள் தீர்வு காணப்படாது காணப்பட்டன.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட 38 கணக்காய்வுப் பந்திகள் 2012 பெப்ரவரி 14 ஆந் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி அரசாங்கக் கணக்குக் குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு வழங்கப்பட்ட கட்டளையின் படி நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அதில் மேலும் 23 கணக்காய்வுப் பந்திகள் தீர்வு காணப்படாது காணப்பட்டன.

(இ) அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் 15 அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 61 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 19 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த கணக்காய்வு ஐய வினாக்களுடன் கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி முறையே ரூபா 993,613,982 மற்றும் ரூபா 16,658,765 ஆக இருந்தன.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் அவ்வப்போது பிரதம செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(இ) மதிப்பீட்டைத் தயாரித்தல்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்தல்

(உ) மாகாண சபை அபிவிருத்தித் திட்டம்

(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்

(எ) உள்ளகக் கணக்காய்வு